of a tradition that the Ministers consider it good etiquette to make important announcements in the House when it is in session before doing so elsewhere.

இந்த மரபை அமைச்சர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதுமில்லை என்று கூறி, நிறைவு செய்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்து, மாநிலத்தின் நிலை பற்றிப் பேசியதோடு, உணவு தானிய ஒதுக்கீடு, நிதியுதவி ஆகியவற்றைக் கேட்டு வந்ததாகவும், மேலும் பல்வேறு திட்டங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அதுபற்றிய முழு விவரத்தை இந்த அவையின் கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலேயே அது குறித்து நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அறிக்கையாகத் தரத் தேவையில்லை என்று கருதுகிறேன். கவர்னர் உரைக்குப் பதிலளிக்கிற நேரத்தில் அது பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(இ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பெற்ற பிரச்சினை குறித்து

திரு. சா பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேன். தாங்கள் அது குறித்துத் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால், இன்று பத்திரிகைகளில் பார்க்கிறபோது அந்த உரிமைப் பிரச்சினை எழுப்பியவரும் அது என்ன பிரச்சினை என்று சொல்லவில்லை, அப்போது தீர்ப்புத் தந்த மாண்புமிகு சபாநாயகரும் அது என்ன பிரச்சினை என்று